ஆலோசனையைப் பெற்று ஹைவேவிஸ் எஸ்டேட் பகுதியை சுற்றுலாத் தலமாக அறிவிப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 43, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

43—

ஒருங்கிணைந்த வட்டாட்சியர் அலுவலகம்

***37428—திரு. என்.வி. காமராஜ்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யத்தில் ஒருங்கிணைந்த வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூறாண்டுக் காலம் கண்டிராத மழை வெள்ளத்தை தன்னுடைய கருணை மழையால் வென்று காட்டிய மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுடைய புனித அரசு, (மேசையைத் தட்டும் ஒலி) நூறாண்டுக் காலம் தொடர வேண்டுமென்று மேற்கொண்டிருக்கின்ற பிரார்த்தனையை எடுத்து வைக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) வேதாரண்யத்தில் ஒருங்கிணைந்த வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் அவர்களிடமிருந்து செயற்குறிப்பு பெறப்பட்டதும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016 ஜனவரி 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.*

திரு. என்.வி. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

'தோன்றின் புகழோடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று'

என்ற வள்ளுவரின் குறளுக்கு இலக்கணமாய், புகழோடு பிறந்து, புகழாலே நிறைந்து, புகழோடு திகழ்பவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கன்றின் குரலும், கன்னித் தமிழும் சொல்லும் வார்த்தை 'அம்மா அம்மா'!

கருணை தேடி அலையும் உயிர்கள் உருகும் வார்த்தை 'அம்மா அம்மா'!

தமிழ்நாட்டு மக்களின் கனவை நிறைவேற்றித் தரவே இறைவன் உங்களைத் தந்தான் அம்மா. தமிழையும், தமிழினத்தையும் காப்பதற்காகவே உருவான இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை உலகிற்கு உணர்த்தியவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் கூறும் நல்லுலகில் புகழ் மணக்க நீங்கள் வாழ்வீர்கள் அம்மா. உங்கள் தாய் அன்பில் பத்திரமாய் தமிழ்நாடு தான் வாழும் என, என்னை வாழ வைக்கும் அன்னையே உங்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன்.

எனது வேதாரண்யம் தொகுதிக்குட்பட்ட, வேதாரண்யம் வட்டாட்சியர் அலுவலகம் பழுதடைந்த, பழமையான கட்டடத்தில் இயங்கி வருகின்ற காரணத்தினால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, புதிய கட்டடம் கட்டித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில், 356 கோடி ரூபாய் வாரி வழங்கி, வருவாய்த் துறைக்குத் தேவையான 377 கட்டடங்களை உருவாக்கித் தந்து, வருவாய்த் துறைக்குப் புத்துயிர் அளித்தவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண்கள் 44 மற்றும் 45 பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.*

வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, அதெல்லாம் ஒன்றும் இல்லை. அன்றைக்கே அலுவல் ஆய்வுக் குழுவில் சொல்லியிருக்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) எதற்கெடுத்தாலும் எழுந்து நிற்க முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, எதுவும் கிடையாது. (குறுக்கீடு) அதெல்லாம் அனுமதி எதுவும் கிடையாது, உட்காருங்கள். (குறுக்கீடு)*